# ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மீக சிந்தனைகள் - பாகம் 2

பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு தாய் மொழி தெரியாது. 7 வயது முதல் 21 வயது வரை இங்கிலாந்தில் பயின்றவர். பேச்சும், உடையும், உணவும் 7 வயதிற்கு முன்னும் ஆங்கிலேயருடையது. அவர் கடைசி வருஷம் படிக்கும்பொழுது கனவில் தோன்றிய சன்னியாசி சூலத்தைக் கொடுத்தார். **இதுவரை புறக்கணிக்கப்பட்ட இந்திய பண்பு தலைதூக்கியது.** சுதந்திரம் தாகமாயிற்று. தாரக மந்திரமாகவும் ஆயிற்று. பெற்றது முழுமையாக கிருஸ்துவக் கல்வி, பைபிள், கிரேக்க, லத்தின் தத்துவங்கள், கதைகள். பரோடாவில் ஆசிரியர் வேலை செய்து, வங்காளம் வந்து பத்திரிகை நடத்தி, சுதந்திரம் பெற யோகம் செய்து, பெரு யோகங்களை சிறு முயற்சியால் பூர்த்தி செய்து, சூட்சுமத்தில் சுதந்திரம் பெற்றதை அறியாமல், அசரீரியால் பணிக்கப்பட்டு புதுவை வந்து அவர் எழுத நினைக்கும் முன் எழுதியவை **ஆன்மீக சிந்தனைகள்**. இந்திய மரபில் எழுதுவதில்லை, சொல்வதுண்டு. எழுதும் கருவிகளில்லாத காலத்தில் எழுந்த ஞானம் காவியம், செய்யுளாகி மந்திர ஸ்லோகமாக ஒலித்தன. பகவான் கண்டது தரிசனம். அர்ஜூனன் பெற்ற விஸ்வரூப தரிசனத்தைக் கடந்த தீமையற்ற முழு சத்திய ஜீவிய தரிசனம். அது மரபை அடிப்படையாகக் கடந்தது. முக்கியமாக இறைவனைப் போல் மனிதனும், வாழ்வும் அனந்தமானவை என்பது. உலகம் அற்புதமான அதிசயம். காண்பவர் ஆச்சரியப்படுவர். ஆத்மாவை அறியும் மனிதன் அதற்கு விடுதலையை – மோட்சத்தை – நாடுகிறான். பகவான் கண்டது பிரபஞ்சத்தையும் அதைக் கடந்த பிரம்மத்தையும் உட்கொண்ட ஆத்மா. மனித ஆத்மா அதனுள் ஓர் அணு. நாம் சச்சிதானந்தம் என அறிவதே நம் முழு ஆத்மாவின் பகுதி. **அது தான் பெற்ற அசையாத ஆனந்தத்தை (Bliss) உலகுக்கு வழங்கி பேரானந்தத்தை எழுப்ப (Delight) முயல்கிறது.** ஒரு மனிதனுடைய யோகம் அதை சாதிக்கும். அதன் மூலம் பிரபஞ்ச ஆனந்தம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். இது ஆன்மீகப் புரட்சி. இந்த சித்தியை பகவான் சுருக்கமாக எழுத முயன்று எழுந்தவை 500 + 47 ஆன்மீக சிந்தனைகள். அன்னை Agendaவில் இவற்றிற்கு விளக்கம் எழுதியிருக்கிறார். தான் பெற்ற கல்வி முழுவதும் கிருஸ்துவக் கல்வியானதால் அதைக் கடந்து வர ஆன்மீக சிந்தனைகள் பகவானுக்குப் பயன்பட்டன என்று அன்னை கூறுகிறார். நாமறிந்த காலம், அனந்தம், பிரம்மம் **ஆகியவற்றைக் கடந்த பிரம்மம், அனந்தம், காலமுண்டு என்பவை இதன் சாராம்சம்.** ஆதி மனிதன் நம் இன்றைய அறிவைப் பெற்றிருந்தான் என பகவான் கண்டார். பம்பாயில் பால்கனியில் நின்றிருந்தபொழுது உலக நிகழ்ச்சிகள் சினிமா படம் போல கண்முன் விரிவதைக் கண்டவர் அது பிரபஞ்ச நிகழ்ச்சிகள் என்றிருந்தாலும் இந்தியா திரும்பி வந்தபொழுது ஆங்கிலேயன் ஆளும் வர்க்கம் என்பதால் அவனை மக்கள் நடமாடும் தெய்வமாகக் கருதுவதைக் கண்டார். **இங்கிலாந்திலிருக்கும் பொழுது பகவான் பலதரப்பட்ட மக்களை அறிவார்.** இங்கு வந்தபொழுது அதே தரமான மக்களைக் காணும்பொழுது அவர்கள் அடிப்படையில் உயர்ந்தவரெனக் கண்டார். மனிதனை மனிதனாக்குவது நாணயம், நேர்மை, பிரியம், நல்லெண்ணம், உள்ளத்தூய்மை, உரிமையை விட்டுக் கொடுப்பது, ஆபத்தில் உதவுவது. இவற்றை மனிதத்தன்மையெனக் கூறுகிறோம். இவை எந்த நாட்டிலும் இருக்கும், இல்லாமலிருக்காது. நாகரீகமான நாடுகளில் அதிகமாக இருக்கும். நாகரீகமற்ற நாடுகளில் குறைவாக இருக்கும். **பல நிலைகளில் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியர் எல்லா நிலைகளிலும் உயர்ந்தவர் எனக் கண்டார்.** பிரிட்டன் நாளுக்கு நாள் நாகரீகம் வளர்ந்த நாடு. இந்தியா நாகரீகத்தின் உச்சியை அடைந்து அங்கு அபரிமிதமாக அது பெருகி பிறகு அழிந்த நாடு. இது பகவானுக்கு முக்கியமாகப்பட்டது. வில்லியம் ஆர்ச்சர் பெர்னாட் ஷாவுடன் நெருங்கி வேலை செய்தவர். இலக்கிய விமர்சனம் அவர் துறை. இந்திய கலை, ஓவியம், சிற்பம் போன்றவற்றை அவர் விமர்சனம் செய்து எழுதிய நூல் பிரபலமாயிற்று. **அது விஷயத்தை அறிய முடியாதவர் எழுதிய அர்த்தமற்ற நூல்.** இந்தியாவில் காளி என்பது சிவபெருமானின் பெண் அம்சம். இந்து மதம் சனாதன தர்மம் என்பதால் எல்லா நிலை மக்களும் வணங்கும் காளியாக **காளியை நாம் நூறு அம்சங்களில் ஏற்கிறோம்.** காளியை இரத்தம் அருந்தும் பேயாக ஆர்ச்சர் புரிந்து கொண்டு, அது போல் ஓவியம், சிற்பத்தைப் புரிந்து எழுதிய விமர்சனம் பிரபலமானபொழுது பகவான் அதற்கு பதில் எழுதினார். காரசாரமாக எழுத ஆரம்பித்து காரத்தை நீக்கி சாரத்தை விமர்சனம் செய்து வெளியிட்டார். பிற்காலத்தில் ஆர்ச்சருக்குப் பதில் எழுதியதே தனக்கு சரியில்லை. விமர்சனத்தின் ஆர்ச்சரை விலக்கி வெளியிட விரும்பினார். **இங்கிலாந்தும் இந்தியாவும் எதிரானவை.** அவர்கள் பெற்ற பாண்டித்தியம் பெரியது, சிறு பிள்ளைத்தனமானது. ஏன் பெண்கள் பொட்டை நெற்றியிலிடுகிறார்கள் என்று கேட்ட ஆங்கிலேயன் பெற்ற பதில் அது மையமான இடம். **அப்படியானால் ஏன் மூக்கு நுனியில் பொட்டிடக்கூடாது என்று அவன் கேட்டான்.** புருவமத்தி ஆஞ்ஞா சக்கரம். அது சிவபெருமானின் நெற்றிக்கண். பொட்டு மஞ்சளிலிருந்து செய்யும் குங்குமத்தாலானது. மஞ்சள் சூட்சுமப் பொருள். அதனால் குங்குமம் புருவ மத்தியிலிட்டால், பெண்கட்கு புத்தி

தீட்சண்யமாக எழும். இவற்றை அறியாதவர்க்குக் கூறினால் புரியாது. அவர்களிடம் இவற்றைப் பேசக்கூடாது. இது எங்கள் வழக்கம் எனக் கூறி முடிக்க வேண்டும். எந்த பெரிய கருத்தையும் ஆங்கிலேயர் அறிய முடியவில்லை. **எவரையும் தாக்கிப் பேசும் பழக்கம் பகவானுக்குக் கிடையாது.** எவர் கூறுவதையும் தவறு, பொய் எனக் கூற மாட்டார். உங்கள் நம்பிக்கைக்கு அது பொருந்தும். பகுத்தறிவு ஏற்பது எனக்குப் பொருந்தும் என்பார். தான் பெற்ற கல்வியின் அடிப்படை அறிவுக்குப் பொருத்தமானதல்ல. **இந்தியாவில் கல்வி, அறிவு ஞானம் எனப்படுவது.** ஞானத்தின் அடிப்படையை மரபு அறியும். பகவான் அதையும் கடந்தவர், தான் கண்ட ஞானத்தின் அடிப்படையில் அறிவு விளங்க கிருஸ்துவக் கல்வியின் அடிப்படைகள் போக வேண்டும் எனக் கண்டவர் கண்டவை பல. விவசாயியை மூடநம்பிக்கையுள்ளவன் என விஞ்ஞானி நினைத்தால் அதே அடிப்படையில் விஞ்ஞானியின் நம்பிக்கையை பெரிய மூடநம்பிக்கை எனக் கண்டார். கற்பு சிறந்தது என உலகமறியும். கற்பைக் கடந்த தூய்மையையுடைய ஆத்மா பெறும் ஆனந்தத்தை அறியும் திறனற்ற உலகத்திற்கு எப்படி பிருந்தாவனத்தின் பெருமையைக் கூற முடியும் என வியந்தார். **கற்பனை, அறிவை விட உயர்ந்தது. கற்பனை ரூபம் பெற்றால் அது உலகில் நின்று நிலைக்கும்.** இதை hallucination ஆவிவுருவம் என உலகமறியும். அறிவின் சிகரத்தைக் கடந்த கற்பனையின் சூட்சும ரூப சிருஷ்டியை உலகம் நம்பவில்லை எனவும் கண்டார். இது போன்ற நம்பிக்கை அவநம்பிக்கை. அது கிருஸ்துவக் கல்வியாய் தன்னுள்ளிருப்பதைக் கண்டு அவற்றைக் களைந்தெறிய கருவியாக எழுதப்பட்டவை ஆன்மீக சிந்தனைகள். **சத்பிரேமை வாரம் இருமுறை 2 மணிநேரம் சந்தித்துப் பேசியவை 13 Volumes. அதில் முக்கிய பங்கு ஆன்மீக சிந்தனைகட்குரிய விளக்கம்.** ஐவரைக் கலந்த தேவியின் கற்பு தெய்வீக அம்சமுடையது என பாமர மனிதனுக்கு எப்படிக் கூற முடியும். நெற்றி வேர்வை நிலத்தில் விழ வேலை செய்து 10 ரூபாய் சம்பாதிக்கும் நேரத்தில் பாங்கில் உட்கார்ந்து எழுதினால் 100 ரூபாய் சம்பாதிப்பதை உலகை ஏமாற்றுவது எனப் பாமர மக்கள் நினைக்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதியும் நினைத்தார். **அறிவு பெருகினால் வருமானம் பெருகும் என்பதைப் பிற்காலம் அறிந்து இன்றைய உலக வாழ்விற்குப் பணத்தை அடிப்படையாக்கியதை** அன்று மனிதனுக்குப் புரியும் வகையில் கூறும் மொழி அன்றும், ஏன் இன்றும் உற்பத்தியாகவில்லை. ஆன்மீக சிந்தனைகள் ஆன்மாவை சித்திக்க வைக்கக்கூடியது என்பதை நடைமுறை அனுபவமாக்கலாம். மனம் ஏற்கும் வாதமாக்க இயலாது என்பது பகவான் கண்ட உண்மை.

(1) "இவை ஆவிவுருவம் என்றனர். அதைப் பற்றி ஆராய்ந்தேன். அவை அகவுணர்வில் சைத்திய புருஷனின் உருவகம். புற உலகில் காண இயலாது. **நான் அமைதியுற்று மனித அறிவின் ஆச்சரியத்தை வியந்தேன்.**"

வாழ்வு ஒரு வகையில் எளிதானது, முறையானது, எளிய முறை எழில்மிகு ஏற்றமுடையது. எனினும் அது தலைகீழே மாறித் தோன்ற வல்லது. **மாறித் தோன்றிய நேரம் விபரீதமான எண்ணம் எழும்.** கற்பனை வாழ்வை கெடுப்பதாகத் தோன்றும் நேரம் பயம் எழுந்து கற்பனையே தவறு எனத் தோன்றும். கல்வி சிறந்தது. கல்வியால் மாணவன் சிறந்த இளைஞனாகிறான் எனக் கல்லூரிக்கு அனுப்பிய தகப்பனார் கல்வியால் மகனுக்குத் தன்னிடம் மரியாதை குறைகிறது, கெட்ட பழக்கங்கள் வருகின்றன எனக் கண்டு கல்வி பெறுவதை நிறுத்துகிறார். பல ஆண்டுகட்குப் பின் கல்வியால் ஒரு சில மாணவர்கள் கெட்டழிவதால் கல்வியே தவறு என ஊரும் உலகமும் நினைக்கவில்லையெனக் கண்டபின் ஒரு சிறு குறையுள்ள பெரு நிறைவை மனிதன் ஏற்கிறான். **இது நெருப்பு விஷயத்திலும், ஆடுமாடு விஷயத்திலும், புதிய கருவிகள் – கத்தி போன்றவை – விஷயத்திலும், வெளியூர் பிரயாணம், சம்பந்த விஷயத்திலும்** ஆரம்ப கால பயம் பிற்காலத்தில் விலகியது. ஆன்மீகத்தில் கற்பனை கலங்கரை விளக்காக இன்று அமைகிறது. **ஆரம்ப காலத்தில் அதனால் எழும் சில ஆபத்தைக் கண்டு மக்கள் பயந்து விலகினார்கள்.** ஆசனம் செய்வது பெரிய ஆன்மீக இலட்சியம். அதனால் ஏற்படும் ஆபத்துகள் ஏராளம். கண்பார்வை போகும், காச நோய் வரும். உடல் கோணலாக மாறி அதே நிலையில் நின்று விடும். **குருவின் பார்வையில் செய்தால் ஆபத்து குறைவு என அறிய நெடுநாளாயிற்று.** புதிய நல்லது சிறு கெடுதல்களுடன் வரும். அதற்காக அதை ஆரம்பத்தில் உலகம் விலக்கும். விமான, ரயில் பிரயாணம், பெண்கள் படிப்பு, வேலை, கல்லூரிப் படிப்பு, அரசியல் சேவை, வியாபாரம், கலை, அரசனுடைய நட்பு, போர் என எல்லாத் துறைகளும் மனிதனை உயர்த்துபவை. எதிலும் ஆபத்துண்டு. அது சிறியதாகவோ, பெரியதாகவோ இருக்கும். அதற்கு மனிதன் பயந்து விலகுவான். பயப்படாதவன் வெற்றி பெற்றால் பெரிய ஆத்மாவாவான். ஷெர்லக் ஹோம்ஸ் துப்பறிபவன். அவன் அத்தொழிலில் சிறந்தவன். அது தரும் பிரபலம் பெரியது. ஷெர்லக் ஹோம்ஸ்க்கு சொந்த வருமானமிருந்தது. அவன் வருமானத்திற்காக தொழில் செய்யவில்லை. தொழில் தரும் ஆனந்த அனுபவத்திற்காக துப்பறிந்தான். போலீஸ்காரர்கள் அவன் திறமைக்கு முன் எதுவுமற்றவர். பல சமயம் அவன் உதவியை நாடினார்கள். உதவினாலும் தன் பெயர் வெளிவராமல் பார்த்துக் கொண்டான். ஆனால் குற்றவாளி பெரும் பணக்காரனானால், துப்பறிபவன் உயிர் போகும். குற்றவாளியை துப்பறியும் தொழில் எதிரியாக்குவதால் எந்த

நேரமும் இது உயிருக்கு ஆபத்து. போலீஸ் நிலையும் அதுவே. என்றாலும் அவர்கள் துப்பாக்கி, அதிகாரம், உதவும். சட்டம் அவர்கள் கட்சி. துப்பறிபவனுக்கு துப்பறிய அதிகாரமில்லை. உடுப்பில்லை, துப்பாக்கியுமில்லை. இந்த நிலையில் எதிரிகள் ஏற்படுவது பேராபத்து. **ஆபத்து ஆனந்தம் தருவதால் துப்பறிபவனுக்கு உற்சாகம் எழுகிறது**. அனைவரும் விலக்கும் ஆபத்து தைரியஸ்தனுக்கு அற்புதமான வாய்ப்பு. வீடு பற்றி எரியும் பொழுது உள்ளே மாட்டிக் கொண்ட குழந்தையைக் காப்பாற்ற முடியாத நேரம் தைரிய மிக்கவன் நுழைந்து காப்பாற்றப் பிரியப்படுகிறான். அதனால் வரும் ஆபத்து அவனுக்குப் பொருட்டில்லை. ஐரோப்பிய பிரபு அழகு மிக்கவன். இங்கிலாந்தில் வந்து பிரபலமாக வாழ்கிறான். இவனை எந்தப் பெண்ணும் அடைய உயிர் விடுவாள். இவன் பெண்ணை ஏற்று சில நாள் அனுபவித்து, அவளை அவமானப்படுத்தி, கொடுமைப்படுத்தி, சின்னாபின்னமாக்கி அவள் போட்டோவுடன் வாழ்க்கை வரலாற்றை எழுதி '**நான் அழித்த பெண் மக்கள்**' என ஒரு ஆல்பம் தயாரித்தான். அழகைக் கண்டு மயங்கும் பெண்ணிற்கு அறிவு இருக்காது. இங்கிலாந்து அரசனுக்கு வேண்டிய ஜெனரல் மகள் அழகி, இனியவள், தெய்வீக மனமுடையவள். துரதிர்ஷ்டவசமாக இப்பிரபுவின் மீது 'காதல்' கொண்டாள். தகப்பனாரும், அரசனும் துடிக்கிறார்கள். **ஆசை வயப்பட்டவள் ஆசையை அன்பு எனக் கொண்டு ஆனந்தமாக இருக்கிறாள்**. ஷெர்லக் ஹோம்ஸ் உதவியை நாடுகிறார்கள். அவள் பிரபுவை சந்திக்கிறாள். **பிரபு உயிருக்கு ஆபத்து என எச்சரிக்கிறாள்**. ஆட்களை அனுப்பி ஷெர்லக் ஹோம்ஸை தாக்குகிறாள். நல்ல காரியத்தில் ஆபத்தும் பாதிக்காது, அடிபடுவதைத் தடுக்க முடியாது. ஷெர்லக் ஹோம்ஸ் அந்த ஆல்பத்தைத் திருடி விட்டான். அதே சமயம் பிரபுவால் அழிந்த பெண் அவன் முகத்தில் அக்னிதிராவகத்தை வீசுகிறாள். **அவனழகு விகாரமாயிற்று. ஆல்பம் பெண்ணைக் காப்பாற்றியது. ஷெர்லக் ஹோம்ஸ் வெற்றியைக் கொண்டாடி அரசன் பதக்கம் தருகிறான்**. பிருந்தாவனத்தில் கிருஷ்ண லீலைகளை உலகம் ஏற்காது, பாவமெனக் கருதும். அவ்வானந்தம் கற்பனையின் சிகரம். கலியுகத்திலும் ஒரு துளி (token ஆக) பலித்ததின் சின்னம். அது ஆரம்பித்தது கற்பனையில், அடுத்த கட்டத்தில் கற்பனை சூட்சும உலகில் உருவம் பெற்று நிரந்தரமாகத் தங்குவது அது ஆவி உருவம். இவை ஆன்மீக சித்தியின் ஆரம்ப நிலைகள் என உபநிஷதம் கூறுகிறது. எதிர்காலத்தில் மனிதன் தன் கற்பனையால் உடலுள்ள மனிதனை உருவகப்படுத்த முடியும் எனக் கூறுகிறது. இன்று சூட்சும உலகில் மட்டும் செய்ய முடிகிறது. எது எதிர்கால பொக்கிஷமோ – கற்பனை, ஆவி உருவம் – அதை மக்கள் விலக்க நினைப்பது, பகவானுக்கு ஆச்சரியம் தருகிறது.

(2) "இறைவன் என் கண்களைத் திறந்தார். தாழ்ந்த மனிதனின் உன்னத குணங்களைக் கண்டேன். வெறுப்புக்குரியவரின் கவர்ச்சியைக் கண்டேன். ஊனமுற்றவரின் சிறப்பையும் விகாரமானவரின் அழகையும் கண்டேன்."

**உலகம் உயர்ந்தது, உன்னதமானது, பெருமையுடையது, பெருந்தன்மையின் உறைவிடம், ஹாஸ்ய உணர்ச்சி ததும்பியது என பகவான் கூறுகிறார்**. இதை நாம் மரபில் அறியவில்லை. மரபு கூறுவது எதிரானது. உயர்ந்தவையும் உன்னதமானவையும் நாம் காண முடியாது என்பதால், அவற்றிற்குத் திரை ஏற்பட்டது. திறமையுள்ளவன் பொருளீட்டுவான். ஈட்டிய பொருளை பாதுகாப்பது கடினம். உடனுள்ளவர் அதை எடுத்துக் கொள்வார். ஒருவன் ஈட்டிய தனம் அவனுடையது. அதை நான் கேட்கக்கூடாது என்ற உணர்வு வர நாளாகும். அதுவரை பொருள் ஈட்டினால், பொருளுக்கு ஆபத்து, அதைப் பெற்றவனுக்கு ஆபத்து. ஆரம்ப நாட்களில் தீவட்டி கொள்ளைக்காரனுடைய மனப்பான்மையே மக்களுக்கிருந்தது. எவரிடமும் எது இருந்தாலும் அபகரிப்பதே மனநிலை. ஈட்டிய பொருளை மறைத்து வைக்க வேண்டும். எனவே புதையல் ஏற்பட்டது. மண்ணில் புதைப்பதே மறைப்பது. புதைத்த இடம் தெரியாமலிருக்க அதன் மீது செடியை நடுவார்கள். பிறர் அறியாமலும் புதைத்தவன் அறியவும், பொருள் பாதுகாப்பாக இருக்கவும் முள் செடியை புதையல் மீது நடுவார்கள். **உலகம் அற்புதத்தைச் சிருஷ்டித்து அதை அனுபவிக்கும் நேரம் வரும் வரை அதை மறைக்க முயன்றது சிருஷ்டி.** அதனால் "கண்" திறந்தவுடன் விகாரம் அழகாகத் தெரிகிறது. சிருஷ்டி மறைக்கும் வழி பார்ப்பவனின் பார்வையை மாற்றுவது. அழகான பொருளை விகாரமாகத் தோன்றச் செய்வது. பஞ்சம் வந்தபொழுது தானியத்தை மறைப்பது அவசியம். சுவற்றில் தானியத்தை மண்ணுடன் கலந்து பூசிவிட்டால் தெரியாது. தேய்த்து எடுப்பது கரிப்பு நாளில் ஏற்பட்ட பழக்கம். அழகான பெண்களை அந்தப்புரம் தேடும். அரசனுடைய தொந்தரவு பெரியது. வடக்கேயிருந்து பீதாம்பரம் கொண்டு வந்தவன் அரண்மனைக்கு விற்கச் சென்றான். சோழன் விலையைக் கேட்டு திடுக்கிட்டு வாங்க மறுத்தான். அவன் மந்திரி சடையப்ப வள்ளல். அவர் அரசன் தரமறுத்த விலையைக் கொடுத்து வாங்கினார். சோழனுக்குக் கோபம் வந்து விட்டது. வீரர்களை அனுப்பி சடையப்ப வள்ளல் – மந்திரி – வீட்டில் உள்ள பணத்தை எடுத்துக் கொண்டான். **அதிகாரம் உள்ள அளவிற்கே அனுபவிக்க முடியும்**. சிருஷ்டி அற்புதம் எனினும் அதை அனைவரும் அனுபவிக்கும் அறிவும், வலிமையும் வரும் வரை அதைப் பாதுகாக்க செய்த ஏற்பாடு விகாரம், கடுமை,

கொடுமை. ஔவைக்கு சித்தி கிடைத்தது. அவள் கவியானாள். அவள் பெண். அந்த நாட்களில் பெண் படி தாண்டினால் பாதுகாப்பில்லை. இன்று நம்மூரில் பெண்கள் மாலை 8 அல்லது 9 மணி வரை வெளியில் போவதை மலையாளிகள் கண்டு வியந்து மகிழ்கிறார்கள். சேர நன்னாட்டிளம் பெண்கள் மாலை 6 மணிக்கு மேல் வெளியில் இன்றும் போகும் பாதுகாப்பில்லை. அழகுக்குப் பாதுகாப்பு வேண்டும். பொருளுக்கு, பணம், முத்து, வைரத்திற்குப் பாதுகாப்பு வேண்டும், மனிதன் சிருஷ்டியின் பேரழகை அனுபவிக்க அஞ்ஞானத்தைக் கடந்து ஞானம் பெற வேண்டும். காட்டை *"சாவித்திரி"* மரகதப்பச்சை என வர்ணிக்கிறது. எளிய மனிதன் காண்பது காடு. *"சாவித்திரி"* கண்டது இந்திர லோகம். சிறு குழந்தைக்குப் பாதுகாப்பு தேவை. வயதானவர்கட்கும் பாதுகாப்பு தேவை. வெள்ளிப்பாத்திரம் புழங்குமிடங்களில் எளிய வேலைக்காரர்களை அமைக்க முடியாது. நாட்டுக் கோட்டை செட்டியார் செல்வம் படைத்தவர். அவர்கள் வீடுகள் கோட்டை போன்றிருக்கும். சுவற்றில் சந்து பொந்து இருக்காது. கன்னக்கோல் மரபு வழங்கும் நாடு அது. இன்று பணம் பாங்குக்குப் போவதால் அப்பயமில்லை. 9 வயதில் விவேகானந்தரைக் கண்ட பரமஹம்ஸர் அவர் சிவபெருமான் அவதாரம் என அறிந்தார். அது மற்றவர்க்குத் தெரிவதில்லை. **தெரியாதது பாதுகாப்பு**. இந்தியா செல்வம் மிக்க நாடானதால், முஸ்லீம்களும், ஆங்கிலேயரும் படையெடுத்து வந்தனர். செல்வமிருப்பதால் பாதுகாப்பு தேவை. பாதுகாப்பு இல்லையெனில் நாடு அடிமையாகும். பகவான் சந்திர நாகூரிலிருந்து புதுவைக்குக் கிளம்பி வந்து விட்டபின் CID ஒரு நாள் கழித்து தேடினர். மெடிக்கல் சர்ட்டிபிகேட் வாங்கிய டாக்டரிடமும், டிக்கட் பெற்றவரிடமும் விசாரித்தனர். டாக்டர் "இருவர் வந்தனர். அவருள் ஒருவர் நல்ல இங்கிலீஷ் பேசினார்" என்றவுடன் CIDக்குப் புரிந்து விட்டது. தலைமை ஆபத்து தெளிவான ஆங்கிலம் காட்டிக் கொடுத்து விட்டது. அதற்குள் பகவான் கப்பலேறி விட்டார்.

(3) **"நான் எதைச் சரியென நினைத்து செயல்பட்டேனோ, அது சரிவரவில்லை. எனவே உலகை வழி நடத்தும் விவேகியென ஒருவரில்லை. நடப்பவை தற்செயலாக நடக்கின்றன. காரண காரியம் என்பது தர்ம நியாயமற்ற முரட்டுத்தனமாகும்."**

உலகம் தட்டையென நினைத்தபொழுது உருண்டையென விஞ்ஞானி கூறி அதற்குரிய காரணங்களைக் கூறினான். **விஞ்ஞானி கூறுவதை நாம் ஏற்கலாம், மறுக்கலாம்.** நாமே உலகம் உருண்டையென அறியும் திறன் நமக்கில்லை. ராக்கெட்டில் வானவெளியில் போனபொழுது உலகம் உருண்டையெனக் கண்டனர். உலகம் எப்படி நடக்கிறது என அறிய, அறிபவர் மனம் உலகத்தைக் கடந்த நிலையில் செயல்பட வேண்டும். **எளிய மனிதன் தன் குடும்ப வாழ்வையே அறிய முடியாதவன்.** உலகம் எப்படி இயங்குகிறது என அவனுக்குப் புரியுமாறு கூறும் தத்துவம் இதுவரை எழவில்லை. கதைகளைக் கூறலாம். அவன் அதை ஏற்க வேண்டும், முடியாவிட்டால் பலனில்லை. **நமது பரம்பரையில், "சாஸ்திரம் பொய்யானால் சந்திர கிரஹணத்தைப் பார்" என்பார்கள்.** சாஸ்த்திரப்படி கிரஹணம் நிமிஷம் தவறாமல் வருகிறது எனில் சாஸ்த்திரம் மெய்யெனக் கொள்ள வேண்டும். **Book II / 1** ம் அத்தியாயத்தில் மேற்கூறிய கருத்திற்கு பதில் கூறுகிறார். உலகம் இறைவனால் படைக்கப்பட்டது என்பதை மாற்றி இறைவனே உலகமானான் என்று கொண்டால் உலகம் தற்செயலாய் செயல்படவில்லை, ஓர் சட்டப்படி செயல்படுகிறது என விளக்கிக் கூறுகிறார். **அவனன்றி ஓரணுவும் அசையாது காண் என்பது மரபு பெற்ற ஞானம்**. பகவான் கூறுவது : எந்த அணுவும் எல்லா அணுவுடனும், எல்லா அனந்தத்துடனும் நேரடியாக இணைந்திருப்பதால் – **integral, ஒன்றி இணைந்திருப்பதால் – எதுவும் எல்லாவற்றையும் எப்படியும் அசைக்க வல்லது.** மனிதன் இந்த முழு இணைப்பை அறியாமல், நடப்பவை தற்செயலாய் நடக்கின்றன என நினைக்கிறான். மனிதனுடைய பார்வை பகுதி. இறைவனுடைய செயல் முழுமையானது. ஓர் பெரிய விழாவில் ஆயிரமாயிரம் விளக்குகள் எரிந்தால் எல்லா விளக்குகட்கும் உரிய தனி சுவிட்ச் உண்டு. விழாப்பந்தலுக்கு வரும் கரண்ட் எல்லா விளக்குகளையும் எரிய வைக்கிறது. உலக நிகழ்ச்சிகள் பல்வேறு கோணங்களில் இணைந்துள்ளன என்றாலும் எல்லா நிகழ்ச்சிகட்கும் உரிய ஒரே தொடர்பும் உண்டு. அவற்றை 3 அடுக்கடுக்கான தொடர்புகளாக நாம் அறியலாம். பரமாத்மாவும் பாதாளமும் உள்ளது ஒரு தொடர்பு; ஆத்மாவும் ஜடமும் அடுத்தது. முடிவாக இறைவனும் இயற்கையும். இதை நாட்டிலும், நம் வாழ்விலும் காணலாம். "உங்கள் திருமணம் கலப்புத் திருமணமா?" என்ற கேள்வி 40 மணி நேரம் தமிழ் நாட்டில் கரண்ட்டை நிறுத்தியது. மூன்றரை இலட்ச திட்டத்திற்கு முதலீடு இட்ட திட்டம் இரண்டு கோடி உதவி பெறுவது ஜடமும் ஆன்மாவும் செயல்படுவது. முடிவானது இறைவனும் இயற்கையும் கோபம் எழுந்தால் இயற்கை பூகம்பமாக, புயலாக வெடிப்பது அந்த நிலை பரிணாமம். நாம் மேற்கொள்ளும் செயல் எந்த நிலைக்குரியது, நம் முயற்சி எத்தகையது, சமர்ப்பணம் எப்படி இங்கு செயல்படும் என அறிவது நம் செயலை நாமறிவதாகும். தடம் மாறிச் செல்வதை சமர்ப்பணம் தடை செய்தால் உலகம் செயல்படுவதையும் அதில் நாம் கலந்து கொள்வதையும் காணலாம். இது தற்செயலல்ல, இந்நிலை சட்டத்திற்குட்பட்டதால் இப்படி என் சமர்ப்பணத்திற்குக் கட்டுப்படுகிறது என அறியலாம். கண்மூடி செயல்படுபவர்

நல்லது வந்தாலும் எப்படியென அறியார். கெட்டது வந்தாலும் புரிந்து கொள்ள மாட்டார். அவர் புரிந்து கொள்ளாவிட்டாலும் **கண் திறந்து பார்ப்பவருக்கு தெளிவாகப் தெரியும். எது சட்டம், எது சக்தி, எது எப்படி செயல்படுகிறது என்பது தெட்டத்தெளிவாகத் தெரியும்.** தகப்பனாருக்கு அடங்கிய மகன் இளம் பெண்ணை சர்ச்சில் நிச்சயம் செய்தால், யோகிக்கு மட்டுமல்ல, அங்குள்ள அனைவருக்கும் இந்த நிச்சயம் செல்லாது. முடிவு தகப்பனார் கையில் உள்ளது. தகப்பனார் ஒத்துக் கொண்டால் நடக்கும், ஒத்துக் கொள்ளாவிட்டால், மகனுக்கு நிச்சயத்தைக் காப்பாற்றும் திறனில்லை. இந்த மகனால் தகப்பனார் காலத்திற்குப் பின்னும் அவரை மீறி செயல்படும் திறன் இல்லை. அவரே செய்தாலும் வாழ்வு அச்செயலை ரத்து செய்யும் எனக் காண்பவர் அறிவர். சொல்பவர், காரியம், நேரம், உத்தரவு தருபவர், ஏற்க வேண்டிய உலகம் இவற்றுக்குக் கட்டுப்பட்ட செயல்கள் உண்டு. இவற்றுள் ஒரு அம்சத்திற்குக் கட்டுப்பட்ட செயலுண்டு. சில அம்சங்கட்குக் கட்டுப்பட்ட செயலுண்டு. பல அம்சங்கட்குட்பட்டவை, எந்த அம்சத்தாலும் கட்டுப்படாதது எனவும் செயல்களை அன்பர்கள் கண்டுள்ளனர். இவையனைத்தையும் மீறி தானே தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும் செயல் எழுந்து செயல்பட்டால், தடையாக இருக்க வேண்டிய ஒவ்வொரு அம்சமும் திருவுருமாறி உதவுவதைக் காணலாம். இந்திய சுதந்திரம் 1942 இல் கிரிப்ஸ் மிஷினிலும், 1946 இல் காபினட் மிஷினிலும், 1947 இல் மௌண்பேட்டனிடமும், காந்திஜீ, ஜின்னா, அகிம்சை, வங்காளப் பஞ்சம், 1946 இல் எழுந்த நேரடிப் போராட்டம், ஒரு கோடி மக்கள் இடம் பெயர்ந்தது டெல்லி அழியும் நிலையை எட்டியது **எல்லாவற்றையும் மீறி சத்திய ஜீவிய சக்தியால் நிறைவேறியதை பகுதி பகுதியாகப் பல இடங்களில் எழுதியுள்ளேன்.** தற்செயல் என்பதேயில்லை. எல்லாம் இறைவன் செயல் என்பதை II / 1ம் அத்தியாயம் விளக்குகிறது.

(4) **“அதன் காலத்தில் எந்த எண்ணங்களும் அவற்றின் எதிரானவையும் உண்மையோ அவையே உண்மை. எதிர்ப்பை ஏற்காதவை ஆபத்தான பொய்மை.”**

என் மதம் எல்லோர்க்கும் உண்மை என்பது வேறு என் மதம் எனக்கு உண்மை என்பது போல் உன் மதம் உனக்கு உண்மை என்பது முழு உண்மை. ஆணுக்கு வருமானத்தில் பெண் அடிமை எனில் குடும்ப நிர்வாகத்தில் பெண்ணுக்கு ஆண் அடிமை என்பது முழு உண்மை. போர் வீரன் போரை வென்று ஊரைக் காப்பாற்றினால் அதிகாரம் முழுவதும் போர்த்தலைவனுக்குப் போகும் என்பது பகுதியான உண்மை. போர் நடந்து உற்பத்தி பெருக்கி உணவளித்த மக்களுக்கும் போர் வெற்றியில் பங்குண்டு என்பது முழு உண்மை. **சமூகம் ஞானத்தை உற்பத்தி செய்கிறது, போரை வெல்கிறது, உணவை உற்பத்தி செய்கிறது, ஞானி, வீரன், விவசாயிக்குரிய சேவையை மற்றவர்கள் செய்வதால்** வெற்றியின் முழுமை முழு சமூகத்திற்குடையது. ஞானத்தை விளக்குவது ஞானியின் பங்கு. ஆனால் ஞானம் அனைவருக்கும் உரிமை உடையது. போரில் வெல்பவன் வீரன். ஆனால் வெற்றியில் அனைவருக்கும் பங்குண்டு. உணவை உற்பத்தி செய்பவன் விவசாயி. உணவு அனைவருக்கும் உரியது. சேவையைச் செய்பவர் பலர். ஆனால் சேவை அனைவருக்கும் உரியது. ஞானத்தைக் கண்டவனுக்கு மட்டும் ஞானம் உரியது. போரின் வெற்றி வீரனுக்கு மட்டும் உரியது. உணவை உற்பத்தி செய்தவன் மட்டும் உண்ணலாம். சேவை செய்பவனுக்கு மட்டும் உரியது என்பவை பகவான் கூற்றுப்படி ஆபத்தான பொய்களாகும். **பகுதியான உண்மைகள் புரட்சியை எழுப்பும்.** பகுதியான உண்மைகள் அழிந்து முழு உண்மையெழும். பிரெஞ்சு, ரஷ்ய, அமெரிக்க புரட்சிகள் அப்படி எழுந்தவை. வட இந்தியாவில் அரச பதவி க்ஷத்திரியரிடமே இருந்தது. தென்னிந்தியாவில் இப்பகுதியான உண்மைகள் அழிய முயன்று அரச பதவி வெள்ளாளரிடம் வந்தது. மன்னராட்சி போய் மக்களாட்சி வந்தபின் ஞானம் என்ற கல்வி அனைவருக்கும் உரியதாகி விட்டது. போரில் வீரனாக எல்லா மக்களும் சேரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உணவை உற்பத்தி செய்தவன் மட்டுமே உண்டால், நாட்டில் பஞ்சம் எழும். சேவை அனைவருக்குமில்லாவிட்டால் சேவை செய்பவன் பட்டினி கிடப்பான். சேவை செய்பவனுக்கும் கல்வி வந்து 200 ஆண்டுகளாகின்றன. நாட்டிற்கு ஆபத்து எனில் வீட்டிற்கு ஒரு ஆள் போரில் சேர வேண்டும். நிர்ப்பந்தம் அதிகமானால் 18 வயதிற்கு மேற்பட்ட எல்லா ஆண்களும் போர் முனைக்கு வர வேண்டும். போரின் அளவு பெரியதானால் உற்பத்தி பல மடங்கு பெருக்காமல் போரை வெல்ல முடியாது. கப்பல் கட்டுவதை போர்க்காலத்தில் துரிதப்படுத்த முனைந்த பொழுது ஆபத்தான குறுகிய இடங்களில் நடந்து செய்ய வேண்டிய வேலைகட்கு நெடுநாள் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் எழுந்தது. **நடனமாடுபவர் அனைவரையும் அந்த வேலைக்குக் கட்டாயப்படுத்தி எடுத்துக் கொண்டனர்.** பிரான்சில் பிரபுக்கள் இதரருடன் பழகுவதேயில்லை. இங்கிலாந்து பிரபுக்கள் கிரிக்கட் விளையாட வேலையாட்களைச் சேர்த்துக் கொள்வார்கள். பிரிவினை பிரான்சில் அதிகம். இங்கிலாந்தில் வியாபாரம் பெருகியதால் பிரிவினை சற்று குறைந்து காணப்பட்டது. அதனால் பிரெஞ்சுப் புரட்சி இங்கிலாந்தில் பரவவில்லை என்பது சில வரலாற்று அறிஞர் கூறுவது.

(5) **"தர்க்கம் சத்தியத்தின் பரம எதிரி. புண்ணியம் என்பதற்கு எதிரி "நான் செய்வதெல்லாம் சரி" என்பது. தன் குறையை ஒருவரால் காண முடியாது. மற்றவர்களால் அவர்கள் குறையைக் காண இயலாது."**

ஆன்மீக தத்துவம் உலகில் ஓருடல், ஓர் உயிர், ஓர் மனமுண்டு எனக் கூறுகிறது. அந்த ஒன்று பலவாகத் தோன்றுகிறது. ஒவ்வொரு ஆத்மாவும் இதர ஆத்மாக்களுடன் இணைந்து பிரபஞ்ச ஆத்மாவாவது ஆன்மீக அவசியம். தர்க்கம் என்பது சிறியது விளங்க ஏற்பட்டது. தர்க்கம் அதை வலியுறுத்தினால் குதர்க்கமாகும் என்பதை காக்காய் கறுப்பாக இருப்பதால் கறுப்பானதெல்லாம் காக்காய் எனத் தர்க்கம் கூறக்கூடாது என்ற உதாரணத்தின் மூலம் விளக்குவார்கள். அகந்தை சிறியதை வளர உதவியது. அதன் கருவி பகுத்தறிவு, தர்க்கம், அவை செய்த சேவை பெரியது. பகுத்தறிவும் தர்க்கமுமில்லாமல் உலகம் இந்த அளவு முன்னேறியிருக்க முடியாது. கட்டை வண்டியே வாழ்வில் பெரிய சாதனம். காசிக்குப் போவதற்கும் கடல் கடந்து போகவும் கட்டை வண்டியைப் பயன்படுத்த வற்புறுத்தினால் முன்னேற்றம் தடைபடும். ஆயிரக்கணக்கான அணுகுண்டு உற்பத்தி செய்தது. தர்க்கம். அது அர்த்தமற்றது எனக் கூறத் தேவையில்லை. உடல் எப்படி ஏற்பட்டது எனக் கூற வந்த பகவான் மனத்தை பிரிவினையால் ஐக்கியத்தை நிலைநிறுத்தும் கருவி என வர்ணிக்கிறார். அத்தத்துவம் பல கட்டங்களைக் கடந்து உடலில் முடிகிறது என்கிறார். பூத உடலழிந்து சூட்சும உடல் ஏற்பட்டு புனர்ஜென்மம் வந்த பிறகே காயகல்பம் சூட்சுமத்தில் பூரணம் பெறும் என்றார். எதற்கும் அளவுண்டு என்பதால் தர்க்கத்திற்கும் அளவுண்டு. 1965 இல் வடநாட்டார் "இது இந்தியா. எங்கள் மொழி இந்தி, இதுவே மெஜாரிட்டி பேசும் மொழி. அதனால் அனைவரும் ஹந்தியை ராஷ்ட்ர பாஷாவாக ஏற்க வேண்டும்" என்றனர். **தர்க்கம் குதர்க்கமான பொழுது, நாடு பத்து துண்டாகப் பிரியும் நிலை எழுகிறது.** குதர்க்கம் பகுதியான மக்களுக்கிருந்தாலும் நாட்டிற்கு logic of the infinite அனந்த தர்க்கம் புரிந்ததால் இணைந்த நாடு பிரிவதைத் தடுக்க முடிந்தது. 1862 இல் அமெரிக்காவில் இது எழுந்து போரிட்டு அடங்கிற்று. இன்று அயர்லாந்து, ஸ்காட்லண்டில் எழுகிறது. ஒரு புறம் 27 நாடுகள் ஒன்று சேர்ந்து EU ஏற்படுகிறது. மறுபுறம் USSR 17 துண்டுகளாகப் பிரிகிறது. **பிரிந்தவர் நெருக்கமாகச் சேர்வது பெரிய சட்டம்.**

(6) **"இறைவன் அடிக்கடி அவன் வேலைகளில் தவறுகிறான். இறைவனுக்கும் அவன் ராஜ்ஜியத்திற்கும் எல்லையில்லை என இது காட்டுகிறது."**

அமெரிக்கர் குப்பைத் தொட்டியில் போடும் உணவு ஏராளம். ஒரு நாடு பிழைக்கும் அளவு அவர்கள் உணவை விரயம் செய்கிறார்கள். மழை குறைந்த நாடு அமெரிக்கா. மக்கட் தொகையும் குறைவு. விளைநிலம் புன்செய் ஆனாலும் இந்தியா போல் 3 மடங்கு பரந்தது. விளைக்கும் முறைகள் நம் நாட்டைப் போல் பன்மடங்கு அதிகம். **நிலத்தை பயிரிடாமலிருக்க மானியம் தருகிறது சர்க்கார்.** எந்த நாட்டு உணவுப் பஞ்சத்தையும் இன்று போக்குவது USA. ஜெர்மனிக்கு வந்த அமெரிக்கர் ஹோட்டலில் சாப்பிட்டபின் tips கொடுக்க சர்வருக்கு $ 25,000 கொடுத்தார். அளவு பெருகி அபரிமிதமெழுந்தால் எதற்கு எதை எந்த அளவு செலவு செய்வது என்ற கட்டுப்பாடு விலகுகிறது. தண்ணீர் வறண்ட பகுதியிலிருந்து ஒருவர் காவிரிப் பாய்ச்சலுள்ள ஊரில் திருமணம் செய்து கொண்டார். அவர் நண்பர்கள் திருமணத்திற்கு வந்தவர்கள் திருமணத்தை மறந்து "நம்மூரில் தண்ணீருக்கு திண்டாட்டம். இங்கு கொண்டாட்டம்" என்று திருமணத்தை விமர்சனம் செய்தனர். சுபீட்சம் அபரிமிதமாகும். அபரிமிதம் சுபீட்சமாகும். 12 வயது பையன் சினிமா பார்க்க தகப்பனாரைப் பணம் கேட்டான். தகப்பனார் ரூபாய் 500 கொடுத்தார். அது அபரிமிதமா, அறிவீனமா என்பதை விட அதுவே உண்மை. மனிதன் பஞ்சம், பற்றாக்குறையை அறிவான். அவன் பற்றாக்குறையை அறியுமிடத்திலும், இறைவன் அபரிமிதத்தைக் காண்கிறான். ஒரே கூடையிலிருந்து வந்தவர்கட்கெல்லாம் மீன் எடுத்துக் கொடுப்பது இறைவனுடைய அபரிமிதம். காமதேனுவும், கற்பக விருட்சமும் கட்டுக்கதைகளில்லை. கொஞ்ச நாள் முன் உலகத்து செல்வத்தை $ 16 டிரில்லியன் டாலர் எனக் கணக்கிட்டனர். இன்று அதுவே $ 226 டிரில்லியன் எனக் கூறுகிறார்கள். டிரில்லியன் டாலர் என்பது 40 இலட்சம் கோடி ரூபாய். 1956 இல் சத்திய ஜீவியம் வந்தபின் செல்வம் தானே பெருகிறது. ஆபீஸில் வேலை செய்பவரும் ஒன்று, இரண்டு, மூன்று வீடுகள் வாங்குகிறார்கள். Internet இல் Wikipedia வுக்கு நீளம் உண்டா, அளவுண்டா, அதை எடுக்க நேரம் தேவையா? நீளம் வளர்கிறது, நேரம் குறைகிறது. இது Cyberspace ஒரு வகையில் சூட்சுமமானது. Subtleக்கு எல்லையுண்டா? இறைவனுடைய நிலையை சில அம்சங்களில் மனிதனும் பெறும் நிலை 1956க்குப் பின் வந்து விட்டது. கொடுமையால் உலகம் நிறைந்தது என்பது மாறி கொடுமை அழிகிறது. கொடுமை திருவுருமாறி நன்மையாகிறது என்ற நிலை ஏற்படுவதும் அளவு எல்லையற்று வளர்வதின் அம்சமாகும்.

மூலம். ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவாற்றியவர்: திரு.ஜெகன்னாதன்
சொற்பொழிவாற்றி தேதி: 29.02.16

%%%%